பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QB/8948/78

மலர்: 21 ஆனி: 26 ஷஃபான்: 14 இதழ்: 148

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10-7-79

## 'ஸ்கைலாப்' செய்திகள்

[ஹூஸ்டன்]

விண்வெளி ஆய்வுகூடமான 'ஸ்கைலாப்' பூமி விழ்ச்சி சம்பந்தமாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் நேற்று [கடைசியாக] அறிவித்த தகவல்கள்:

'ஸ்கைலாப்' எதிர்வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை பூமியில் வந்து விழும்.

பூமியில் விழுவதற்கு இரண்டுமணி நேரத்துக்கு முன்னதாகவே இடம், நேரம் பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய இரண்டு தினங்களிலும் பொதுமக்களின் நடமாட்டம் ஓரளவு மட்டுப்படுத்தப்படுவது விரும்பத்தக்கது.

கடைசிநேரம்வரை 'ஸ்கைலாப்' எந்தவிதமான உயிர் பொருள் சேதத்தையும் ஏற்படுத்தாதவிதத்தில் 'நிலைமை' மாற்றியமைக்கப்படும்.

# வடபகுதிக்கு 80 வீதம் சிங்களப் பொலிஸார்?

[கொழும்பு]

வடபகுதிக்கு விரைவில் அதிகமான அளவில் சிங்களப் பொலிஸார் அனுப்பி வைக்கப்படவிருப்பதாக அரசாங்கவட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

எண்பது சதவிகிதமான சிங்களப் பொலிஸார் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட விருப்பதாக இந்த வட்டாரங்களிலிருந்து நம்பகமாகத்தெரிய வருகிறது.

வடபகுதியில் தொடர்ச்சியாகத் தலைதூக்கிவரும் வன்செயல்கள், பொலிஸாருக்கு எதிரான சம்பவங்கள் ஆகியனவற்றின் எதிரொலியாகவே வடபகுதிக்கு கூடுதலான சிங்களப் பொலிஸாரை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் திருத்தி நிறைவேற்றப்பட்ட குற்றச் சட்டக் கோவையின்படி, முறைப்பாட்டுக்காரர் சமர்ப்பிக்கும் அல்லது தெரிவிக்கும் மொழியிலேயே பொலிஸ் நிலையத்தில் எழுதப்படவேண்டும் என்று இருப்பதால், வடபகுதிக்கு கூடுதலான சிங்களப் பொலிஸார் வருவதையிட்டு மொழிப் பிரச்சினை மேலும் சிக்கலாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ம]

### இன்று இந்திய நாதஸ்வர இசைக்கச்சேரி

[யாழ்ப்பாணம்]

இந்தியப்புகழ் நாதஸ்வரக் கலைஞர்களான சாத்தனூர் எடுத்துக்கட்டி திரு எஸ் என் கணேசனும், தஞ்சாவூர் அம்பல் இராமச்சந்திரனும், புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய பூங்காவனத் திருவிழாவில் நாதஸ்வரம் வாசிக்கவுள்ளனர். [கெ]

### கூட்டணி தோல்வி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைபோரப் பற்று ப. நோ. கூ. ச கிளைக் குழுத்தேர்தலில் சுயேச்சை 9 பேரும் வெற்றிபெற்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவருமே வெற்றி பெறவில்லை. (ம-இ)

## "எதிர்க்கட்சித் தலைவன் என்பதால் அரசுக்கு துதிபாடத்தான் வேண்டுமா?"

### 'சலுகைகள்பற்றி' 'அமிர்' விளக்கம்

[யாழ்ப்பாணம்]

'இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்து எதிர்க்கட்சித் தலைவனுக்கு செய்து கொடுக்க வேண்டிய வசதிகளை இந்த அரசாங்கம் செய்து கொடுத்துள்ளதே தவிர, தமது கட்சியின் பணத்திலிருந்தோ அல்லது சிங்கள மக்களின் பணத்திலிருந்தோ எந்த வித வசதியையும் அரசு செய்து கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் நான், எதற்காக அரசாங்கத்திற்குப் புகழ்பாட வேண்டும்? அரசாங்கம் செய்யும் தவறுகளைக் கண்டு அதைக் கண்டிக்காமல் மௌனமாக இருப்பதானால் எதிர்க்கட்சித் தலைவனாக இருக்கத் தேவையில்லை'

வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ரி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

"அரசாங்கத்தின் புகழ்பாடுபவனாக நான் இருக்க வேண்டும் என்று அரசு நினைத்தால் எதிர்க்கட்சித் தலைவனாக இருக்கத் தேவையில்லை. ஒரு சிலர் பின்கதவால் சென்று மந்திரிப் பதவி அடைந்தது போல் நானும் ஒரு மந்திரிப் பதவியைப் பெற்றிருந்தால் தான் அரசாங்கத்தைத் துதிபாடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

"கௌரவ ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது சுதந்திரக்கட்சி விட்ட பிழைகளை பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியும் இடித்துக் காட்டியதோடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் அணிசேரா நாடுகளின் மகாநாடு நடைபெற்றபோது சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் அநீதியைப் பற்றி துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிட்டு அணிசேரா நாடுகளின் அமைச்சர்களுக்கும் அவற்றை [illegible] எதிர்க்கட்சித் தலைவனாக இருக்கும் நானும் அன்று ஜே. ஆர். செய்தது போல் அரசாங்கம் இழைக்கும் அநீதிகளை தமிழ் இனத்திற்கு இழைத்துள்ள துரோகங்களை பாராளுமன்றத்திற்குள்ளும் புறமும் எடுத்துக் கூறிவருகிறேன். இது எப்படித் துரோகமாகும்?

"தேர்தல் காலத்தில்" ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறாக கூட்டணிக்கு வேலைசெய்த ஆசிரியர்கள் பலர் மட்டக்களப்பிலிருந்து மன்னாருக்கும், வவுனியாவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். இந்த ஆசிரியர்களுக்காக நாம்

6ம் பக்கம் பார்க்க

### அரசின் 2-வது ஆண்டு நிறைவு

## அத்தனகலையில் விசேட விழா

[கொழும்பு]

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தின் 2-வது ஆண்டு நிறைவை ஒட்டிய விசேட வைபவங்கள் அத்தனகல தொகுதியில் இம்மாதம் 21-ந் திகதி நடைபெறுகின்றன.

இவ்வைபவத்தை ஒட்டி நாடு முழுவதிலும் காணியற்ற ஏழைகளுக்கு இலவசமாகக் காணி வழங்கப்படும்.

நாடு முழுவதும் சமயச் சடங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதமரின் திட்டத்தின்கீழ் தொகுதிகள் தோறும் கட்டப்பட்ட தலா 10 வீடுகளும் அன்று வீடற்றவர்களுக்கு வழங்கப்படும்.

அன்று மாலை அத்தனகலையில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள், எம். பிக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறுகிறது. (இ)

## தோட்டி வேலையில் அறப்போராட்டக் குழுவினர்

[சாவகச்சேரி — கொடிகாமம்]

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவினர் நேற்றுக் காலை சாவகச்சேரியில் தோட்டி வேலையில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 6 மணிக்கு சாவகச்சேரி நகரசபை முன்பாகவுள்ள வள்ளுவர் சிலையருகே ஒன்றுகூடிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, திரு. காசி ஆனந்தன், திரு. மாவை. சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு துரைராசசிங்கம், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு. கயிலைவாகனம் உட்பட பெருந்தொகையான தொண்டர்கள் இரண்டு பிரிவுகளாக தோட்டி வேலையில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் தலைமையில் ஒரு பிரிவினர் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வாளி

[6-ம் பக்கம் பார்க்க]

## மதுபோதையில் இருந்த உயர் அதிகாரிகள் கைது!

[புலோலி]

பருத்தித்துறையைச் சேர்ந்த முள்ளி - என்னும் இடத்தில் மதுபோதையில் இருந்த நான்கு உயர் அரசாங்க உத்தியோகத்தர்கள் வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்ததால் பொலிசாரால் கைது செய்தனர்.

பருத்தித்துறை — கொடிகாமம் வீதியில் முள்ளி என்னுமிடத்தில் மதுபோதையிலுள்ள நால்வர் வாகனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தி வருவதாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்றபோது குறிப்பிட்ட நால்வரும் கார் ஒன்றை மறித்து அதன்மேல் ஏறி கலாட்டா செய்யும்போதே கையும் மெய்யுமாகப் பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

பொலிசார் இவர்களை விசாரணை செய்தபோது ஒருவர் வெளியிடத்தில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமை யாற்றுபவர் என்பதும் மற்றவர்கள் விவசாயத் திணைக்கள ஊழியர், ஆசிரியர் என்பது தெரியவந்தது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எம். பி. ஜெகசரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தபோது தலா இரண்டு ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி இம்மாதம் 16-ந் திகதி வரை தினமும் மாலை நீதிமன்றத்தில் கையெழுத்திடுமாறும் பணிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து வீதிகளில் பலத்த கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (கு)

இந்திய இருபெரும் நாதஸ்வரக் கலைஞர்கள் ஒரே மேடையில் நாதஸ்வரக் கச்சேரி.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயாக்கடவை சித்திவிநாயகர் கோவில் பூங்காவனத் திருவிழாவான இன்று 10-07-79 செவ்வாய்க்கிழமை இரவு 8-00 மணிக்கு நடைபெறும்.

இந்தியப்புகழ் சாத்தனூர் எடுத்துக்கட்டி

நாதசுர கர்ப்பண ஞானமணி எஸ். என். கணேசன்

இசைநாதமணி தஞ்சாவூர் அம்பல் இராமச்சந்திரன்

இருவரும் இணைந்து இசைமழை பொழிவர். 3007

## வரி விளம்பரம்

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்றிக் வயறிங்) ரேடியோ (Transistor) Building Technology P. M. G Ceritificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாஷி சோல் வீதி, யாழ்ப்பாணம். 2990

### தேவை

யாழ்ப்பாணம், ரேயல் டிஸ்பென்சரிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும். 2997

டச்சின் பிறின்டிங் வேலையில் அனுபவம் வாய்ந்தவர் உடன்தேவை, விண்ணப்பிக்கவும் லக்கி போட்டோ மன்னார். 2992

### சோதிடம்

குறிப்பு பார்த்து பலன் சொல்வதின் மூலம் உங்கள் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும், [ கல்வி, விவாகம், தொழில், வெளியூர் செல்லுதல் முதலியன [ குறிப்புடன் ருபா 5/-அனுப்புக K. L. M Krishnapillaiy, ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிட நிலையம், மாவிட்டபுரம். 2986

### கல்வி

ஐ. ஏ. ஆர். தொழிற் கல்வி நிறுவனத்தில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் ஒரு ரூபாய் பெறுமதியான முத்திரை அனுப்பவும். K.P. ஆனந்தன், 1/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 3005

# வனவிலங்குகளின் சாகசம்!

# உலகப்புகழ் வீரர்களின் சாதனை!

# ஒவ்வொரு குடும்பமும் பார்க்கவேண்டிய சர்க்கஸ்

**கா. யோகநாதன்**

'அப்பொலோ சர்க்கஸ்' இலங்கையில் காட்சிகள் முடிவடைந்தபின் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருக்கிறது. அப்பொலோ சர்க்கஸ் நிர்வாகப் பங்காளர் திரு சி வி. ஸ்ரீதரனைச்சந்தித்தபோது இத்தகவலை அவர்தெரிவித்தார்.

திரு. ஸ்ரீதரன் மட்டுமல்ல அவரது சகோதரர் கே. சகாதேவன் தனியாக "ஜெமினி சர்க்கஸ்" ஒன்றை நடத்தி வருகின்றார். திரு சகாதேவன் அப்பொலோ சர்க்கஸின் டைரக்டராகவும் இருந்துவருகிறார்.

'சுபாஸ் விடுதி'யில் திரு. ஸ்ரீதரன் தங்கியுள்ளார். பழகுவதற்கு இனியவர்! அவர் பேசும்போது தமிழ், ஆங்கிலம், மலையாளம் எல்லாம் ஒருகப் பின்னிப்பிணைந்து சுவையாக இருக்கிறது.

''இங்கு சரியான காற்றாக இருக்கிறதே'' என்று கூறிய அவர் ''வழக்கத்தில் இப்படித்தானு?'' என்று கேட்டார்.

''வழக்கத்தில் இப்படி இல்லை'' என்றேன்.

தமது சர்க்கஸில் கலைஞர்கள், தொழிலாளர்கள் உட்பட 230 பேர் யாழ்ப்பாணம் வந்திருப்பதாக அவர் கூறினார்.

'எத்தனை மிருகங்கள் வந்திருக்கின்றன' என்று கேட்டேன்.

7 யானைகள், 10சிங்கங்கள், 5 புலிகள், 2 கரடிகள், 2 குதிரைகள், குதிரைக்கும் வரிக்குதிரைக்கும் பிறந்த 'சோபிரு' ஒன்று என்றடுக்கிக் கொண்டே போனார்.

'சோபிரு' உலகில் ஒன்றே ஒன்றுதான் இருப்பதாகவும் சொன்னார்.

### 10 சிங்கங்கள்

"10 சிங்கங்களில் ஒன்று சுகவீனமுற்று இறந்துவிட்டது. இந்தியாவிலிருந்துஇவர்களுடன் மிருக வைத்தியர் டாக்டர் பிரேம்லால் வந்திருந்தார்.

சிங்கத்திற்குச் சுகவீனமென்றதும், கொழும்பிலிருந்துமிருக வைத்தியர் செல்வி சுட்பிரமணியமும் வந்திருந்தார். காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த 'சிங்கம்'சிகிச்சையளித்த பின் இறந்துவிட்டது'' என்றார் அவர்.

### தவறான செய்தி

இறந்த சிங்கத்தின் இறைச்சியை மற்ற மிருகங்களுக்கு உணவாகப் போட்டதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வந்துள்ளதாகவும் அது தவறு என்றும் திரு. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

டாக்டர் பிரேம்லாலை, சந்தித்தபோது இதுபற்றிக்கேட்டேன்.


இறந்த சிங்கத்தின், உடல் வெட்டி புதைக்கப்பட்டு விட்டதாகவும், கொழும்புப்பத்திரிகையில் வந்தசெய்தி தவறு என்றும், டாக்டர் பிரேம்லால் சொன்னார்.

அதற்குப்பின்பும் 2 சிங்கங்களுக்குச் சுகவீனம் ஏற்பட்டதாகவும் மிருக வைத்தியர்கள் சிகிச்சையளித்துச் சுகம்பெற்றுவிட்டதாகவும், திரு. ஸ்ரீதரன் கூறினார்.

### புலி இங்கு குட்டிபோட்டால்

மிருகங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது புலி ஒன்று குட்டி ஈனப்போவதாகவும் அவர் கூறினார். குட்டிக்கு

(5-ம் பக்கம் பார்க்க)



மதுப்பழக்கத்தால் நோயுற்ற ஒருவனுக்கு டாக்டர் ஒருவர் சிகிச்சை அளித்துக்குடியினால் வரும் கேட்டை அறவுறுத்துவதாக அமைந்துள்ளகாட்சி இது. அப்பொலோ சர்க்கஸில் குடிகாரயானையையும் டாக்டர் யானையையும் இங்கே காண்கிறீர்கள். இப்படி மிருகங்களின் அநேக சாகசங்களை அப்பொலோ சர்க்கஸில் காணலாம் (படம்: பிரபா போட்டோ-தேவா)

## சுங்க ஏலவிற்பனை

1979ம் ஆண்டு யூலை மாதம் 19ம் திகதி காலை 10-00 மணியளவில் ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் கீழ்விபரிக்கப்பட்டுள்ள மோட்டார் வள்ள உதிரிப்பாகங்கள் (நானுவிதமானவை) பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனைகளின் முழுநிபந்தனைகள் 1954ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட 10,675ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 1ம் பிரிவின் 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பொருட்களை 1979ம் ஆண்டு யூலை மாதம் 17ம் 18ம் திகதிகளில் ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் பார்வையிடலாம்.

1. மோட்டார் வள்ள உதிரிப்பாகங்கள் (பிஸ்ரன் வளையங்கள், பெயரிங்ஸ் ஆதியன).
2. தடையாணிகளும் தடையங்களும்.
3. உயிர்காப்பிகள் - இறப்பர் (பழுதடைந்தவை).
4. தீந்தைகள்.
5. ஆயுதப் பெட்டி.
6. கம்பிக் கயிறும் தும்புக் கயிறும்
7. தார்விரிப்பு-ஒரு சுருள்.
8. கம்பி ஆணிகளும், புரி ஆணிகளும்.
9. மூக்கட்டு எண்ணெய் யும் பிறேக் எண்ணையும்.
10. ஒட்டுப்பசை.
11. அட்செசிவ்.
12. மருந்து நீர்வகை.
13. [காடினர்] மோட்டார் வள்ள இயந்திரம்-நம். 2 [6சுற்று] [பழுதடைந்தது]
14. பழுதடைந்தஇரும்புகள்
15. [Jocks] [2] லக்கும் 1 உலையும்.
16. வேலைத்தளத்துக் களஞ்சியத்துக்குமான தளபாடங்கள்
17. ஒருபழுதடைந்த துவிச்சக்கரவண்டி

பூரணமான பொருள் விபரத்திரட்டுக்களை யாழ்ப்பாணம் உப-சுங்க சேகரிப்பாளரிடத்திலும் ஊர்காவற்றுறை உப-சுங்க சேகரிப்பாளரிடத்திலும் பார்வையிடலாம்.

எஸ். எம். சேனரத்தின,
யாழ்ப்பாண மாவட்ட
சுங்க சேகரிப்பாளருக்காக
ஸ்ரீ ல. சுங்கத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

29-6-79 2987

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற இல. 49, கண்டிரோட், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மனுவல்பிள்ளை யேசுதாசன் என்பவரின் மரண சாதனம் இல்லாத சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர் மனுவல்பிள்ளை யேசுதாசன் பெண் பிபியானு இல. 49, கண்டி ரோட், யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன )
) இல: 3442
நியாயாதிக்கம் )

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர்கொண்ட குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ம் ஆண்டு ஆடி மாதம் இருபதாம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதி மன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1979 ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

வரைதல்
ஒப்பம்
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
2982

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காரைநகர் மேற்கு, காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலுப்பிள்ளை என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம், காரைநகர், தற்போது சிங்கப்பூர், தனது தத்துவகாரி சுந்தையா பெண் பத்மாவதி, கலாவிக்பிட்டி, காரைநகர்,

மனுதாரர்

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல: மி/3443

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1979ம் ஆண்டு ஆடி மாதம் 20ந் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1979ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி.
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்:
(ஒப்பம்)
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
2981

## பாடசாலை உபயோகத்திற்குரியன

1. தவணைப்பரீட்சை இடாப்பு (3 மொழிகளில்)
   40 பெயர்கள் 13 பாடங்கள் எழுதக்கூடியது
   24 பக்கம் ரூ. 15/-, 50 பக்கம் ரூ. 25/-
2. வசதிக்கட்டண இடாப்பு(45 பெயரிடக்கூடியது) 1/25
   24 பக்கம் ரூ 15/-, 50 பக்கம் ரூ 25/-
3. வசதிக்கட்டணப் பற்றுச்சீட்டு (3 மொழிகள்)
   100 மூலப்பிரதி & 100 இணைப்பிரதி ரூ. 7-00
4. 'லீவு' விண்ணப்பப்படிவம் (3 மொழி) ரூ. 4-00
5. மாணவர் மதிப்பீட்டுப் படிவம்

பாலர் வகுப்பு, I &II ஆம் வகுப்பு, III, IV,V வகுப்பு தனிப்பிரதி சதம் -/18. 100 பிரதிகள் 16-00.

சுன்ஞகம் : தனலக்குமி புத்தகசாலை.

## வேலணை மத்திய மகாவித்தியாலயம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

13-6-79-ல் பின்போடப்பட்ட மேற்படி சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் 12-7-79 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

பெற்றூர், ஆசிரியர், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

அதிபர்.

10-7-79 2999

## நன்றிநவிலல்

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த செல்வி அருணசலம் கமலாதேவியின் 5- 7- 1979 இல் நடந்த மரணச்சடங்கில் பங்கு பற்றியவர்கள், உதவியளித்தவர்கள், சுகவீனமாக இருந்தகாலத்தில் கொழும்பில் உதவி புரிந்தவர்கள், ஊரார், உறவினர், நண்பர்கள், மேற்குறித்த திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் எங்களது உள்ளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவிக்கிறோம். தனித்தனியாக நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

சகோதரன், அ. தர்மலிங்கம்,
சிறுப்பிட்டி.

3006

# ஊனமுற்றவர்களுக்கு உதவ புனர்வாழ்வு இல்லம் அவசியம்

- வேலணை எஸ். தணிகாசலம் -

ஊனமுற்றவர்களை, மற்றவர்கள் ஒரு வேறுபட்ட மனிதராக விலக்கிவைப்பது எவ்வளவு வருத்தமாக இருக்கிறது?

வலதுகுறைந்தவர்களும் மனிதர்கள்தான் என்ற எண்ணம் ஒவ்வொரு மனிதனிடத்திலும் எழவேண்டும்.

வலது குறைந்தவரை ஒரு பிச்சைப்பாத்திரமாகக் கருதாமல் தங்களில் ஒருவர் எனக்கருதிச் சகல சந்தர்ப்பங்களிலும் விலக்கி வைக்காமல் அவர்களை ஒரு குறிக்கோள் உள்ள வாழ்க்கைக்குள்ளாக்க வேண்டும் என்று நேற்றைய "ஈழநாடு" இதழில் தெரிவித்த இக்கட்டுரையாளர் ஊனமுற்றவர்களுக்குப் புனருத்தாரண இல்லங்களின் அவசியம்பற்றியும் அவர்களுடன் உறவை வளர்க்கும் வழிவகை பற்றியும் இங்கு குறிப்பிடுகிறார். ஊனமுற்றவர்களுக்குப் புனருத்தாரண இல்லங்கள் மிக அவசியமானவை.

[நேற்றைய தொடர்ச்சி]

புனருத்தாரண இல்லங்கள் ஒரு முக்கோணத்தின் மையமாகவும் கருதப்படலாம். அதன் மூலைகள் வைத்தியசாலைகளாகவும் ஊனமுற்றவர்களின் வீடாகவும் தொழில் செய்யும் இடமாகவும் இருக்கும். வீட்டில் வாழ்வதற்கும் ஒரு தொழிலைச் செய்வதற்கும் வீட்டிலிருந்து தொழில் செய்யும் இடத்திற்குப் போவதற்கும் வெளியுலகப் பிரச்சினைகளுக்கு ஈடு கொடுப்பதற்கும் இந்த இல்லங்கள் தேவையான பயிற்சியைக் கொடுக்க வேண்டும். இவ்வில்லங்கள் தங்களுடைய வீடுகளுக்குப் போக முடியாதவர்களை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

வலது குறைந்தவர்கள் உங்களுடைய சகோதர சகோதரிகளே உங்களுக்கு அரசாங்கத்திலும் கொடை வள்ளல்களிடத்தும் தொழிலதிபர்களிடத்தும் செல்வாக்குண்டு. ஒரு தேசத்தின் பண்பாட்டினதும் கலாச்சாரத்தினதும் தரம் அது தன்னுடைய துர்ப்பாக்கிய மனிதரை எவ்வாறு நடத்துகின்றது என்பதைப் பொறுத்தே மதிக்கப்படுகின்றது, சந்தோஷமாக இருப்பதற்கு ஒரே வழி பிறர் சந்தோஷமாக வாழ உதவுவதுதான். இவைகள் எல்லாம் ஒன்றையே குறிக்கின்றன.

அதாவது நீங்கள் ஊனமுற்றவர்களுக்கு உதவ கடப்பாடு உடையவர்கள் என்பதுதான் அது. நீங்கள் இதை விலக்கவோ புறக்கணிக்கவோ முடியாது.

## யாழ்ப்பாணத்தின் குறை

யாழ்ப்பாணத்தில் ஒரு புனருத்தாரண இல்லமும் இல்லை. இதுமிக அவசியமானதும் அவசரமானதுமான தேவையாகும். உங்களுடைய இதயத்தையும் சிந்தனையையும் இதில் வைத்து உங்களால் இயன்றளவு உதவுங்கள். ஊனமுற்றவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவ இப்போது உதவுங்கள். 'இப்பொழுது' என்ற ஒரே பறவை தான் பொன் முட்டையை இடும்.

ஊனமுற்றவர்களுக்கு இல்லங்கள் நிறுவி உதவ வாழ்லயன்ஸ் கழகமும் வேறு சில பிரமுகர்களும் முயற்சி எடுத்து வருகிறார்கள். இவர்களுடன் சேர்ந்து ஏனையோரும் உதவ வேண்டும்.

வலது குறைந்தவரைச் சந்திக்கும் பொழுது அவருடன் நட்பைத் தொடக்க- வளர்க்கச் சில வழிகள்:

(1) முதலாவதாக ஒரு அங்கவீனர் ஒரு மனிதன் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். அவருடைய ஆற்றல் சிலவற்றில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதே தவிர, மற்றும்படி அவர் ஏனையவரைப் போலவே உள்ளார்:

(2) நண்பர்களுக்கிடையே ஒரு குறைபாடு புறக்கணிக்கப்படவோ மறைக்கப்படவோ தேவையில்லை. ஆனால் அந்தளவுக்கு நட்பு வளரும்மட்டும் அவர் ஒரு மனிதன் என்ற முறையில் அன்பாகப் பழகுங்கள்.

(3) அவரைச் சந்திக்கும் பொழுது உங்கள் இயல்பான சுபாவத்துடன் இருங்கள்.

(4) நீங்கள் பொதுவாக எவருடனும் சம்பாஷிக்கும் விடயங்களைப் பற்றியே அவருடனும் சம்பாஷியுங்கள்.

(5) அவர் உதவி கோரும் பொழுது உதவுக. அவர் தனக்குத்தானே உதவக் கூடியதாக இருக்கும் பொழுது உதவ வேண்டும் ஆனால் எப்பொழுதும் உதவுவதற்கு ஆயத்தமாக இருங்கள்.

(6) பொறுமையாயிருங்கள் ஊனமுற்றவர் தன்னுடைய இயல்பான வேகத்தில் நடக்கவோ, பேசவோ விடுங்கள்.

(7) அவருடன் சேர்ந்து சிரிப்பதற்குப் பயப்படாதீர்கள்.

(8) உங்களுக்குத் தெரியாத ஊனமுற்றவரைக் கண்டால் விடுப்புப் பார்ப்பது போல் ஏதோ அபூர்வப் பிராணியைப் பார்ப்பதுபோல் பார்க்காதீர்கள். எந்த ஒரு மனிதனும் பெறவேண்டிய மரியாதையை அவரும் பெறத் தகுதி உடையவர்.

(9) மேலதிகமாகப் பாதுகாக்காதீர்கள். அன்பினும் மேலதிகமான பொருட்களை அவரிடம் திணிக்காதீர்கள்.

(10) அவர் நாணும்படியாகக் கேள்விகள் கேட்காதீர்கள். அவர் தன்னுடைய குறைபாட்டைக்கூற விரும்புவாராயின் அவரே அதைக் கூறுவார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### வாளிமலகூடங்களை துப்புரவு செய்யுங்கள்

யாழ். மாநகரசபை நிர்வாகத்திற்குட்பட்ட பல இடங்களில் உள்ள வாளி மலகூடங்கள் ஒழுங்கான முறையில் துப்புரவு செய்யப்படாததால் இப்பகுதியில் வாழும் மக்கள் பல இன்னல்களுக்காளாகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் தினசரி சுத்திகரிக்கப்படவேண்டிய மலசல கூடங்கள் இரண்டு கிழமைக்கு ஒருதரம் கூடச் சுத்திகரிக்கப்படுவதில்லை.

ஆணையாளர் ஆட்சிமாறி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி வந்த பின்பும் இந் நிலை சீர் திருந்தவில்லை.

குடிசன நெருக்கம் அதிகமாக உள்ள இரண்டாம் குறுக்குத் தெருவில் இன்னும் பல இடங்களில் வாளி மலசல கூடங்களே இருந்துவருகின்றன அவ்விடங்களில் மலம் அகற்றப்படாமல் இருப்பதால் நகரில் பல தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய நிலையும் உருவாகியுள்ளது.

எனவே மாநகரசபை நிர்வாகம் உடனடியாக வாளி மல கூடங்களை தினமும் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு நகரை சுத்தமாகவும், மக்களைச் சுகாதாரமாக வாழவும் வழிவகுக்க ஆவன செய்யும் என எதிர் பார்க்கப்படுகிறது.


மரியதாஸ்.
2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.


மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் நிறுவனம் தமது இரண்டு வருட வைப்புகளுக்கான சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டத்தினை புதிய அம்சங்களுடன் மறு அறிவித்தல் வரை நீடித்திருக்கிறது என்பதனை அறியத்தருகிறது.

மாதாந்தம் வழங்கும் 24% வருடவட்டி பெறும் 2 வருட சேமிப்புத் திட்டம்

| வைப்புத்தொகை | மாதாந்தம் செலுத்தப்படும் போனசுடன் கூடிய வருடவட்டி |
|---|---|
| ரூபா 2,500 முதல் ரூபா 25,000 ம் குறைய | 18% |
| ரூபா 25,000 முதல் ரூபா 50,000 ம் குறைய | 19% |
| ரூபா 50,000 முதல் ரூபா 100,000 ம் குறைய | 22% |
| ரூபா 100,000 ம் மேல் | 24% |

MASTERS



மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையிற் பெரியதும், உறுதிவாய்ந்ததும் உங்கள் பணத்திற்கு அதி உயர்ந்த பாதுகாப்பை வழங்குவதுமான ஓர் நிதி நிறுவனம்.

- மொத்த ஆதனம் ரூ. 116,000,000/- க்கும் மேல்
- மூலதனமும் ஒதுக்கீடும் ரூ. 7,200,000/- க்கும் மேல்
- வைப்புக்கள் ரூ. 75,000.000/- க்கும் மேல்

ஆகவே, உங்கள் சேமிப்புகளுக்கு அதிக பலனைப்பெறும் நோக்கம் உண்டானல் இன்றே கொழும்பில்உள்ள மெர்க்கன்டைல் கிறெடிட்டில் அல்லது அதன் எந்தவொரு கிளை நிலையத்திலும் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
(நிதிப் பிரிவு)
51-53 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1.
கிளை நிலையங்கள்:
யாழ்ப்பாணம்: 11/9, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை: 27 1 /1. தர்மபால மாவத்தை, தொலைபேசி: 2466
அனுராதபுரம்: 2, ஹரிஸ்சந்திர மாவத்தை, தொலைபேசி: 634
கண்டி: 901/A, பேராதனை வீதி, தொலைபேசி 4196
ஏஜன்ட்மார் ஏனைய முக்கிய நகரங்களிலும் உள்ளனர்

# நாட்டைப்பிரிக்க முயன்ற 'மீசோ தேசியவாத இயக்கத்திற்கு தடை!

## தலைவரும் கைது!

### வெளிநாட்டிலிருந்து ஆயுதம், இராணுவப் பயிற்சி, நிதிஉதவிபெற்றனராம்

புதுடில்லி, ஜூலை. 9

இந்தியாவின் ஒரு பகுதியாகிய மீசோரம் மாநிலத்தை வேறாகப் பிரித்துதனிநாடுஒன்றை அமைக்கும் முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடு பட்டிருந்த மீசோரம் மாநிலத்தின் மீசோ தேசியவாதிகள் முன்னணிக்கு இந்திய அரசு தடைவிதித்துள்ளது.

மீசோ தேசியவாத முன்னணியின் தலைவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடு ஒன்றிடமிருந்து தமது இயக்கத்திற்கு நிதி, ஆயுத உதவி ஆகியன பெற்றதாகவும் மீசோ தேசியவாதிகள் வெளிநாட்டில் இராணுவப் பயிற்சி பெற்றதாகவும் குற்றம்சாட்டியே மீசோ முன்னணிக்கு இந்திய அரசு தடை விதித்துள்ளது.

இதே வேளையில் மீசோரம் மாநிலத்திலிருந்து மீசோ இனத்தைச் சேராதவர்கள் வெளியேறிவிட வேண்டும் என்று துண்டுப்பிரசுரமொன்றின் மூலம் அறிவித்திருந்த தேசியவாதிகள் பின்னர் வன்முறைகளில் ஈடுபட்டு பலரைப் படுகொலை செய்தனரென்றும் அறிவிக்கப்பட்டது. [இ]

## ஸ்கைலாப் பீதி: மதுரை மீனாட்சிக்கு விசேடபூஜை

மதுரை, ஜூலை 9

பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் 'ஸ்கைலாப்' விண்வெளி கூடத்திலிருந்து இந்திய மக்களைக் காப்பாற்றுமாறு மதுரைமீனாட்சி அம்மனை வேண்டி விசேட அபிஷேக ஆராதனைகள் நேற்று நடைபெற்றன.

## சட்ட மூலம் தடை!

புதுடில்லி, ஜூலை 9

இந்தியாவில் சீதனம் வாங்குவது சட்டத்தின் மூலம் தடை செய்யப்படவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் இந்தியபாராளுமன்றத்தின் குளிர்காலகூட்டத்தொடரில் இது தொடர்பான சட்ட மூலம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. [இ]

## சங்கீத, நடன இறுதிப்போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் தமிழ் மொழிப் பாடசாலைகளின் சங்கீத, நடன, நாடக இறுதிப் போட்டிகளை இம்முறையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இப்போட்டி இம்மாதம் 29ம், 30ம், திகதிகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

## தப்பியோடிய இரு கைதிகளில் ஒருவர் கைது!

[சொழும்பு]

காலியிலிருந்து கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட இரண்டு கைதிகள் ரயில் இடையில் நின்றபோது ரயிலிருந்து தப்பி ஓடிவிட்டனர் என்றும் ஒரு கைதி மீண்டும் அகப்பட்டுக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில் பாதையில் பலா மரம் ஒன்று விழுந்து கிடந்ததை அடுத்து ரயில் நிறுத்தப்பட்டபோதே இக்கைதிகள் தப்பி ஓடினராம். [ம-இ]

## ஊனமுற்றவர்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

(11) பிச்சை கொடுக்க முயற்சிக்காதீர்கள். வலது குறைந்தவரும் ஏனையவரைப் போல சமமாக நடத்தப்படவே விரும்புகிறார். அவர் தனது ஆற்றல்களை வெளிக்கொணர ஒரு தருணத்தை விரும்புகிறார்.

(12) சக்கர நாற்காலியையோ, ஊன்றுகோலையோ அவர் கேட்டாலொழிய ஓர் ஊனமுற்றவரிடமிருந்து பிரித்து அப்புறப் படுத்தாதீர்கள். அவற்றைத் தன் கைக்கெட்டிய தூரத்தில் வைத்திருக்க அவர் விரும்பக்கூடும்.

(13) ஒரு வலது குறைந்தவருடன் உண்ணும் பொழுது அவரது உணவை வெட்டுவதற்கோ, அல்லது குழைப்பதற்கோ முற்படாதீர்கள். தேவையானால் உங்களையோ அல்லது பரிமாறுபவரையோ கேட்பார்.

(14) ஓர் ஊனமுற்றவரைப் பற்றி, ஒரு அபிப்பிராயத்தை முன்கூட்டியே, உங்கள் மனதில் உண்டாக்கிவிடாதீர்கள். அவருடைய விருப்பங்களையும் ஆற்றல்களையும் அறியும் பொழுது உங்கள் அவசர முடிவு எவ்வளவு பிழையானது என்பதை அறிந்து ஆச்சரியப் படுவீர்கள்.

(15) ஊனமுற்றவருடன் நட்பை இன்பமாக அனுபவியுங்கள். அவருடைய வாழ்க்கைத் தத்துவமும் நல்நகைச் சுவையும் உங்களுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கும்.

## வானில் மிதக்க இருக்கும் 'ஸ்கைலாப்' துண்டுகளினால் விமானங்களுக்கே ஆபத்து!

### விண்வெளி கட்டுப்பாட்டு நிலயம் அறிவிப்பு

ஹூஸ்டன், ஜூலை 9

பூமியில் விழஇருக்கும் ஸ்கைலாப் ஆய்வுகூடத்தால் மனித உயிர்களுக்கு ஆபத்து இல்லை யெனவும் வானில் மிதக்கப் போகும் ஸ்கைலாப் துண்டுகளால் விமானங்களுக்கு ஆபத்து ஏற்படலாமெனவும் ஹூஸ்டன் விண்வெளி கட்டுப்பாட்டு நிலயம் அறிவிக்கிறது.

ஸ்கைலாப் ஆய்வுகூடம் வளிமண்டலத்துள் பிரவேசித்ததும் அரைவாசிப் பகுதி எரிந்துசாம்பலாகிவிடுமெனவும் மிகுதி சுக்குநூறாகஉடைந்து போகுமெனவும் அறிவிக்கும் ஹூஸ்டன் கட்டுப்பாட்டு நிலயம் இவ்விதம் சுக்குநூறாகும் பொழுது சிறுதுண்டுகளாக மாறும் துண்டுகள் வானமண்டலத்தில் மிதக்கக்கூடுமென வும் இதனால் விமானங்கள் எதிர்நோக்கும் ஆபத்து பற்றியே தாம் அக்கறை செலுத்துவதாகவும் அறிவிக்கின்றது.

இந்த ஆய்வுகூடம் 1980ம் ஆண்டளவிலேயே பூமியில் விழுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சூரியபுள்ளிகளினால் இவ்ஆய்வுகூடத்தின் வேகம் அதிகரித்து இவ்வருடமே வளிமண்டலத்துள் விழுகிறது எனவும் மேற்படி நிலயம் தெரிவிக்கிறது.

ஸ்கைலாப்பின் துண்டுகள் ஒரு கட்டிடத்தின்மீது விழுந்தாலும் கட்டிடத்தின் கூரை மட்டுமே சேதமடையும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். [கி-இ]

## உலகவங்கியின் ஆதரவுடன் நடைபெறும் மதிப்பீடு

[யாழ்ப்பாணம்]

இலங்கை திட்டச்செயலாக்க அமைச்சின் சனத்தொகை புள்ளி விபரத்திணைக்களம் உலகவங்கியின் அனுசரணையுடன் இலங்கையின் சகல பாகங்களிலும் கருத்தரிப்பு வள வீழ்ச்சிக்குரிய காரணிகளை அறியுமுகமாக ஓர் மதிப்பீட்டை நடாத்துகின்றது.


இவ்வளவீடு 1975ம் ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட உலக கருத்தரிப்புவள அளவீட்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் நடைபெறுகின்றது.

இம்மதிப்பீட்டில் பேட்டி அளிப்பவரின் பின்னணி விபரம், பிள்ளைப்பேற்று வரலாறு, விவாகம், கருத்தரிப்பு வனக்கிரமம், தொழில், கணவனின் பின்னணி, பிள்ளைகளின் உதவி, குடும்பச் சொத்து முதலிய விபரங்களும், கணவன், ஒருபோதும் விவாகம் செய்யாத ஆண், பெண்பிள்ளைகளிடமிருந்து அவர்களின் வாழ்க்கை, விவாகத்திட்டங்கள் முதலானவற்றுக்கான பதில்கள் பெறப்படும் இதற்காக நாடு பூராவும் 5 500 குடித்தனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குடிசன மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் 100 வெளிக்களப் பெண் ஆய்வாளர்கள் இக்குடித்தனங்களில் பேட்டிகாண்பார்கள். இப்பேட்டியில்சேகரிக்கும் தகவல்கள் ஒன்றுதிரட்டி ஆராய்ச்சிகள் செய்வார்களேயன்றி தனிநபரின் விபரங்கள் ஒன்றும் வெளியிடப் படமாட்டாது. அவை இரகசியமாகப் பாதுகாக்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

அளவீட்டின்வெற்றி பொதுமக்கள் அளிக்கும் தகவல்களிலேயே தங்கியிருப்பதால் அவர்களின் ஒத்துழைப்பை இவ்வளவீட்டிற்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர் கோருகிறார்.

கிழக்குப் பிரதேசத்தில் புள்ளிவிபரவியல் அறிஞர் திரு. இ. பாலகிருஷ்ணன் இணைப்பாளராகக் கடமையாற்றுகிறார். அவர் தலைமையில் இரு குழுக்கள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலைநாட்டுப் பிரதேசங்கள் ஆகிய மாவட்டங்களில் ஆய்வு நடத்துகிறார்கள். புள்ளிவிபர ஆய்வான உத்தியோகத்தர்கள் திருமதி நாகேந்திரன் திருமதி வேதநாயகம், திருமதி ராதா. நிமலசேன, செல்வி மார்க்கிரட் ஆகியோரும் இருகுழுக்களாக வழிநடத்துகிறார்கள். [கா]


நெற்பயிரைப் பாதிக்கும் எல்லாப் பூச்சிப் புழுக்களையும் கட்டுப்படுத்த



BAYER

லெபேசிட்




Melville Assauw Designs

நெற்பயிரில் சந்துக்குத்தி, இலை அரிப்புழுக்கள், மூட்டுப்பூச்சி, தத்துக்கிளி உட்பட மற்றும் பூச்சிப்புழுக்களையும், கத்தரிக்காய், புடோல் பீக்கு, மா, தோடை உட்பட மற்றும் பயிர்களையும் தாக்கும் பூச்சிபுழுக்களைக் கட்டுப்படுத்த லெபேசிட் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம லிமிட்டெட,

400 யூனியன் ரோட் கொழும்பு 10

தபால் பெட்டி 70 டெலிபோன் 93563 96311

கொட்டகை நிறைந்த 5-வது வாரம்
REGAL Daily at 3-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

சில தினங்கள் மட்டும்
வின்சர் [யாழ்ப்பாணம்] போன்: 400
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ [யாழ். நகர்] போன் 7693 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா
செல்வம்

86வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
ராஜா [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

மனோகரா [யாழ். நகர்] 10-30, 2-30, 6-30, 9-45
விஜயகுமார்-ஜெயசித்ரா-நாகேஷ்
தேவரின்
தாயில்லா குழந்தை

ஸ்ரீதர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
நாகேஷ்-கல்பனா நடித்த
சாது மிரண்டால்
[புத்தம் புதிய பிரதி]

4-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

A Grand Release! Daily 5 Shows
SHANTHI JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 P. M.
He didn't want to be a Hero... until the day they pushed him too far.
CHARLES BRONSON
Mr. MAJESTYK-Color
Adults Only - Full of Action Packed Film
Charles Bronson Received the Golden Globe Award in 1972, for the "Worlds Most Popular Actor"
நீங்கள் என்றும் கண்டிராத பரபரப்பையூட்டும் பயங்கரக் கார் ஓட்டங்கள், திகிலூட்டும் துப்பாக்கி வேட்டுகள், மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் நிறைந்த அற்புத அதிசிறந்த திரை ஓவியம்

# இன்றைய பலன்

ஆனிமாதம் 26-ம் திகதி
[செவ்வாய்க்கிழமை]
(10-7-1979)

**மேடம்:** பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும், திறமைக்கு முதலிடமுண்டு. பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும், இதயச்சுமை அகலும். தொழில்துறையில்புதிய வெற்றிகளும் உண்டு.

**இடபம்:** இனந்தவர்களின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும், நீண்டபிரயாணம்குறித்தி திட்டமிடப்படலாம், நல்ல நாள்.

**மிதுனம்:** சிந்தனைகளின் தாக்குதல் உங்களைச் சிந்திக்க வைக்கும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், வைத்தியச் செலவுகளுக்கு இடமுண்டு.

**கடகம்:** குளுமையான சம்பவங்கள் இடம்பெறும், வாழ்க்கையில் பசுமை தோன்றும், சாஸ்திரவழியால் இலாபமும் கிடைக்கும்.

**சிங்கம்:** இலட்சியவாதிகளுக்கு இன்றுசிறப்பானதன்று. புண்ணிய விருட்புக்கும் இடமுண்டு.

**கன்னி:** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், சிறிய தலையிடிக்கு இடமுண்டு.

**துலாம்:** கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில்ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

**விருச்சிகம்:** மக்கள்மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், உள்ளத்தில் உவகை துள்ளும்.

**தனுசு:** அவசரம் வேண்டாம், ஆயுதபீடைக்கு இடமுண்டு. நில் நிதானி அமைதி உன்காலடியில்.

**மகரம்:** இரு விடயங்கள் கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம், வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும், உங்களைச் சிக்க வைப்பதற்காகச் சூழ்ச்சிவலை விரிக்கப்படும், சிந்தித்த பின் செயலாற்றவும்.

**கும்பம்:** பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள், இதன் மூலம் பல செலவாகும், அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

**மீனம்:** தூக்கம் இமைகளைத் தழுவுவதற்குமறுக்கும். இதயப்படுதாவில் இளமை நினைவுகள் மீண்டும் தலைதூக்கும், ஆனந்தமும் ஆத்திரமும் கலந்தநிலையில் அவதிப்படுவார்கள், தெய்வநம்பிக்கை வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ராகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி, சாவித்திரி
காத்தவராயன்

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீவித்யா
ஆசை அறுபது நாள்

ஜனத்திரள் நிறைந்த
3-வது வாரம்
Rio Phone: 7607
Daily 10-30,
(Jaffna) 4-45, 7-00 &
9-30 p. m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.

## சிங்கள மக்களின்

# உரிமைக்கு குரல்எழுப்பினால் நாம் வகுப்புவாதிகளா?

## சிறில் மத்யூ கேள்வி

[கொழும்பு]

பெரும்பான்மை இனமான சிங்கள மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டி உள்ளன. இந்நிலையில் நாம் அவர்களின் உரிமைகள் பற்றிப் பேசும்போது எம்மை வகுப்புவாதி என்கிறார்கள். சிறுபான்மையினரான தமிழ் மக்கள் தமது உரிமைபற்றிப் பேசும்போது அவர்கள் தமது உரிமைக்காகக் குரல் எழுப்புகிறார்கள் என்று கூறுகிறார்கள். இதன் அர்த்தம்தான் என்ன?

தேசிய வீரர்ஹென்றி பேதிரிஸின் 64-வது நினைவுதினக் கூட்டத்தில் பேசிய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு சிறில்மத்யூ மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு ஹல்வ்ஸ்டவுனிலுள்ள பௌத்த விகாரையில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது!

இந்த நாட்டைப்பிரிக்க நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம், ஜனாதிபதியும் இக்கருத்தை உறுதியாகக் கூறியுள்ளார்.

சிங்கள மக்களின் உரிமைக்கா

[6-ம் பக்கம் பார்க்க]

# ஒவ்வொரு குடும்பமும்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்? என்றுகேட்டேன்

பிறந்தபின் ஆணா பெண்ணா என்றுதெரிந்தபின்தான்பெயர் பற்றி முடிவுசெய்யவேண்டும் எனச் சிரித்தபடி சொல்லியவர் குட்டி இங்கு பிறப்பதால், இங்குள்ள பெயர்தான் சூட்டப்படும் என்றும் சொன்னார்.

## ஒருபகுதி மிருகங்களே இங்கு வந்துள்ளன

இந்தியாவில் நீங்கள் வைத்திருந்த அத்தனை மிருகங்களையும் கொண்டுவந்திருக்கிறீர்களா என்று கேட்டேன்

"இல்லை" என்று பதிலளித்த அவர் "இலங்கை அரசாங்கம், குறைவான மிருகங்களைக் கொண்டுவரும்படி கூறியதால், குறைவான மிருகங்களையே கொண்டுவந்தோம்" என்றார்.

கேள்வி: இந்தியாவில் எத்தனை மிருகங்கள் இருக்கின்றன?

பதில்: 26 யானைகள், 25 சிங்கங்கள், 13 புலிகள் மற்றும் பல மிருகங்கள் இந்தியாவில் இருக்கின்றன

## யார் ஏற்பாடு

கேள்வி: சர்க்கஸ் இலங்கைக்குவர யார் ஏற்பாடு செய்தார்கள்.

பதில்: இலங்கை அரசும் இந்திய அரசும் கலாச்சாரப் பரிவர்த்தனையின்கீழ் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது இந்திய சர்க்கஸ் சம்மேளனம் எங்கள சர்க்கஸை அங்கீகரித்து அனுப்பியது

கேள்வி: இதற்குமுன் எந்த நாட்டில் சர்க்கஸ் காட்டியிருக்கிறீர்கள்?

பதில்! மலேசியாவில்.

7500 பேர் இருந்து பார்க்கக்கூடிய பெரிய கூடாரம் கொழும்பில் போடப்பட்டதாகவும், இங்கு காற்று இருக்கும் என்றகாரணத்தினால் அக்கூடாரத்தைப் போடவில்லை என்றும் திரு. ஸ்ரீதரன் கூறினார்.

இங்கு போடப்பட்டுள்ள கூடாரத்தில் 5500 பேர் இருந்துபார்க்கலாம் என்றும் கொழும்பில் மழை நேரத்திலும் "ஹவுஸ் புல்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு தினம் பலத்த மழை பெய்தபோது சனங்கள் கூடாரத்திற்குவரமுடியாமல் வாசலில் 3 அடி வெள்ளம் இருந்ததாகவும், வெள்ளம் வெட்டிப் பாய்ச்சப்பட்டபின் கூட்டம் வந்ததாகவும் தெரிவித்தார்

கொழும்பில் தினமும் 'ஹவுஸ் புல்லா? என்று கேட்டதற்கு "கடைசித் தினம் சரியான கூட்டம் நூற்றுக்கணக்கான பெண்களும் குழந்தைகளும் பார்க்காமலே திரும்பிச் சென்றனர்" என்று அவர் கூறினார்.

## மீண்டும் கொழும்பில்

இலங்கையைவிட்டுச்செல்லுமுன் மீண்டும் ஒரு தடவை கொழும்பில் சர்க்கஸ் காட்டுவதாக, ஜனாதிபதியிடம் கூறியிருக்கிறேன் என்றார்

யாழ்ப்பாணத்திற்குப் பின் எங்கே செல்லவிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு கண்டியில் அங்கு நடக்கும் பெரகராவின் போது காட்ட உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்.

நான்: தங்கள் சர்க்கஸ் எப்போ ஆரம்பமானது?

40 வருடங்களுக்குமுன் இது ஆரம்பிக்கப்பட்டதாகவும், காரியத்தில் உரிமையாளர் சிக்கியதைத் தொடர்ந்து தாங்கள் பொறுப்பேற்று அபிவிருத்திசெய்து 14 வருடங்களாக நடாத்திவருவதாகவும் சொன்னார்.

## சிங்கம் இறந்ததால்...

நான்: சிங்கம் ஒன்று இறந்துவிட்டதால் அக்காட்சி பாதிக்கப்பட்டதா?

"அவர்: சிங்கங்களும் புலிகளும் குழுக்களாகச் செய்யும் சாகசக் காட்சியில், ஒரு சிங்கம் இல்லாவிட்டால், பாதிப்பு எதுவும் ஏற்படாது."

இலங்கையில் 27 வருடத்திற்குப்பின் "அப்பொலோ" சர்க்கஸ் காட்டப்படுவதாகக் கூறிய அவர், முதலில் இங்கு கமலா சர்க்கஸும், பின் கிறேட் ஈஸ்ரேன் சர்க்கஸும் வந்ததாகத் தெரிவித்தார்.

## 15 தடவை பார்த்தவர்

கொழும்பில் சர்க்கஸ் நடந்த போது ஒருவர் 15 தடவை பார்த்ததாகவும், 15 தடவையும் அவர் பார்த்தபின் தன்னிடம் வந்து பாராட்டுத் தெரிவித்துவிட்டுச் சென்றதாகவும் கூறினார்.

கண்டி, கம்பளை, மாத்தறை போன்ற பல இடங்களிலிருந்தும் மக்கள் கொழும்பிற்கு வந்து சர்க்கஸ் பார்த்ததாகவும் அவர் சொன்னார்

"சந்திரலேகா"வில் கமலா சர்க்கஸ் வந்ததுபோல் தங்கள் சர்க்கஸும் ஏதாவது படத்தில் வந்திருக்கிறதா? என்று கேட்டேன்.

## சினிமா படத்தில்

தேவரின் "ஹாத்திமேரே சாத்தி" என்ற ஹிந்திப் படத்தில் சர்க்கஸ் யானைகள் வருவதாகவும், "மா" என்ற ஹிந்திப் படத்திலும் சர்க்கஸ் வருவதாகவும் திரு. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தமிழ்ப் படங்கள் எதிலும் வரவில்லையா என்று கேட்டபோது "இல்லை" என்று கூறினார்.

முதல் தினம் யானைகள் இலை, குழை உண்ண மறுத்துவிட்டதால் 40 மைல்களுக்கப்பாலிருந்து கரும்புக் கட்டுகள் கொண்டுவரப்பட்டது என்று அவர் சொன்னார்.

வனவிலங்குகளின் அபார சாகஸங்களும், உலகப் புகழ் பெற்ற சர்க்கஸ் வீரர்களின் சாகஸ விளையாட்டுகளும் வாழ் நாளில் ஒவ்வொரு குடும்பத்தினரும் கண்டுகளிக்கவேண்டியதொன்றாகும்.

# வலது குறைந்தோர் வாழ்வு மலர தாராள உதவி வழங்கவேண்டும்!

## லயன்ஸ் புனருத்தாரண கருத்தரங்கில் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"வலது குறைந்தவர்களுக்கு சமூகசேவை இலாகா இலவசமாக மூன்று சில்லு சைக்கிள்களை வழங்கி வருகின்றது. ஆனால் கடந்த வருடமும், நடப்பு நிதியாண்டிலும் ஒரு மூன்று சில்லு சைக்கிள்தானும் யாழ்மாவட்டத்திற்கு அரசு வழங்கவில்லை. அரசியல் காரணங்களினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ யாழ்மாவட்டத்திற்கு இது வழங்கப்படவில்லை என்று எனக்குத் தெரியாது. எனினும் யாழ். லயன்ஸ் கழகத்தின் உதவியினால் இக்காலப் பகுதியில் 15, 20 பேருக்கு மூன்றுசில்லு சைக்கிள்களை வழங்க முடிந்தது"

இவ்வாறு யாழ் லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்த வலது குறைந்தோர் புனருத்தாரணவாரக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட சமூகசேவை உதவி ஆணையாளர் திரு. கே கெங்காதரன் குறிப்பிட்டார். யாழ் பாம் கோட் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கருத்தரங்கிற்கு, லயன் எஸ் சபாரட்ணம் தலைமை வகித்தார். கருத்தரங்கில் யாழ் ரோட்டறிக் கழக பிரமுகர்கள், வர்த்தகர்கள் தொழிலதிபர்கள், வலது குறைந்தோர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். திரு கே கெங்காதரன் தொடர்ந்து கூறியதாவது: "அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வலது குறைந்தோர் பராமரிப்பு நிலையங்களுக்கும், தனியார் அநாதை இல்லங்களுக்கும் அரசு நிதியுதவி வழங்கி வருகின்றது ஒவ்வொரு நபருக்கும் தலா 50 ரூபா வீதமாக இந்நிலையங்களுக்கு நிதியாக வழங்கப்படுகிறது. தனிநபருக்கு அநாதைப் பணமாக 25 ரூபாவும், ஐந்து பிள்ளைகளுடைய குடும்பத்தவருக்கு 75 ரூபாவும் அநாதைப் பணமாக வழங்கப்படுகிறது, இவற்றைவிட வலது குறைந்தோர் ஏதாவது தொழில் பயிற்சி பெறவிரும்பினால் அரச நிறுவனங்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ பயிற்சி பெற்றும் மூன்றுமாத காலத்திற்கு நாளொன்றுக்கு ஐந்து ரூபா வேதனம் வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் சுயமாக தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கு 500 ரூபா வழங்கப்படும் பெண்களுக்கு தையல் மெசின்வாங்குவதற்கும் வசதியுண்டு.

வலதுகுறைந்தவர்கள் பல்கலைக் கழகங்களில் கல்வி பயில்வதற்கு 600 ரூபா முதல் 1200 ரூபா வரை வருடமொன்றுக்கு வழங்கப்படுகின்றது இத்திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரு விழிப்புலனிழந்த மாணவிகள் கல்வி பயில்கின்றனர்' என்றார்.

கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய லயன் எம். ஜே. ஏ. ஜெகநாதன் 'வலது குறைந்தவர்கள் பலவகையிலும் கஷ்டப்படுகின்றனர். அவர்கள வாழ்வு மலருவதற்கு ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செயல்படுத்த வேண்டும், திட்டம் தீட்டுவதால் மட்டும் போதாது, அதை செயல்வடிவில் நிறைவேற்றி வைக்கும்வரை எமது பணியினைத் தொடர வேண்டும். எமது குறிக்கோளாகிய வாழ்விழந்தோர் பணிமனை அமைக்கும் முயற்சிக்கு உங்கள் ஒவ்வொருவருடைய ஆதரவை நாம் கோரிநிற்கின்றோம்" என்றார்.

இந்து இளைஞர் சங்க கலாச்சார செயலாளர் திரு எஸ். முத்துலிங்கம் பேசுகையில், 'வலதுகுறைந்தோரைப் பார்த்து இரக்கப்படும் மனிதரை நாம் காண்கிறோமே தவிர, உதவும் உள்ளங்களை காண்பது அரிதாகவுள்ளது. தூண்டுதலின் மூலம் அல்லாது தானாக வலியவந்து உதவுவதே மனிதனின் சிறந்த பண்பாகும். வலது குறைந்தவரின் வாழ்வு மலர தாராளமாக உதவுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்.

பரந்தன் நவஜீவன அதிபர் வண ஏ. சி. தம்பிராஜா உரையாற்றுகையில், 'வலது குறைந்தோர் பலர், ஏதாவது ஒரு துறையில் சாதாரணத் திறமையுடையவர்களாக இருக்கின்றனர்' என்றார்.

கருத்தரங்கில், ஐ நா. சபையினால் நிறைவேற்றப்பட்ட வலது குறைந்தோர்க்கான உரிமைகள் சாஸனத்தை அடிப்படையாக வைத்து இலங்கை அரசு சட்டமாக்கக் கூடிய 9 அம்சத்திட்டமொன்றினையும், பிரகடனப்படுத்தி அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. ஆர். கதிர்காமர், கைதடி குருடர் செவிடர் பாடசாலை அதிபர் திரு. லயன் ஜே. எஸ். டேவிட் திரு. கு. நேசையா, திரு. எம். தனிநாயகம் உட்பட பலர் கருத்தரங்கில் உரையாற்றினர். மாலை பழைய பூங்காவில் வலது குறைந்தோர்க்கான ஒன்றிணைப்பு சந்திப்பும் நடைபெற்றது.

# ஊழியர்களின் கோரிக்கை இதுவரை வழங்கப்படவில்லை

## தொழிற்சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக ஊழியர்களின் தாய்ச் சங்கமான கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை விபரம் வருமாறு:-

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஊழியர்களின் கோரிக்கைகள் கொடுக்கப்பட்டும் அவர்கள் ஓர் பின்னணியால்தான் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது. எமது கிளையினால் உடுப்பிட்டி பல. நோ. கூ சங்க இயக்குநர் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஒன்பதும் இயக்குநர் சபை 1-7-79ம் திகதிய கூட்டத்தில் பரிசீலனை செய்து; நாம் ஜூன் மாதம் தொடக்கம் விசேடபடி வழங்குவதாக தீர்மானம் எடுத்ததாக பொதுமுகாமையாளரினால் உண்மைப் பிரதி என்ற முறையில் 4-7-79ம் திகதி சங்கத்துக்குக் கொடுபட்டது. இதை எமது கிளையும் தாய்ச் சங்கம் ஆகிய நாமும் ஏற்க மறுத்தோம். காரணம் எம்மை அழைத்து எமது முன்னிலையில் நல்லிணக்க ஒப்பந்தம் செய்ய முன்வராததாலேயே. 7-7-79 ல் அரசாங்க அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவுப் பரிசோதகர், உபதலைவர், எமது கிளைத்தலைவர், நிர்வாக உறுப்பினர் ஆகியோர் முன்னிலையில் கலந்துரையாடி மாலை 4 மணிக்கு ஒப்பந்தம் செய்யும்படி அரசாங்க அதிபர் எழுத்தில் கொடுத்திருந்தார். நாம் மாலை 4-மணி தொடக்கம் சங்கத்தில் காத்திருந்தோம். மாலை 4-30 மணியளவில் உப தலைவர், கூட்டுறவுப் பரிசோதகர், பொதுமுகாமையாளர் ஆகியோர் முன்னிலையில் தாய்ச்சங்க உறுப்பினர் நால்வர், கிளை உறுப்பினர் நால்வர் ஆகியோர் சமுகம் கொடுத்தோம் சமரசமுயற்சி பற்றி கலந்துரையாடி சுமுகமான முடிவை எடுக்க நாம் முன்வந்த வேளையில், உப தலைவர் தான் பொறுப்பு எடுக்க முடியாது என பொது முகாமையாளர் தடுக்கவும் அதையும் மீறி உப தலைவர் வெளிநடப்புச் செய்தார். இவ்விடயம் எமக்கு மிக மனவேதனையை உண்டாக்கியுள்ளது. இதனால் நாம் எமது கிளையை தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் இறக்கியுள்ளோம். இவர்களுக்கு ஆதரவாக எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் பருத்தித்துறை, புலோலி, கட்டைவேலி, நெல்லியடி ஆகிய கிளைகளை வேலை நிறுத்த நடவடிக்கையில் இறக்கத் தீர்மானித்துள்ளோம்.

எனவே நாம் தொடர்ந்தும் எமது உரிமைகளைப் பெற வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளோம். இதற்கு இயக்குநர்சபையே பொறுப்பாகும். [கா-கு]

## உரிமைக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லவே நாம்போராடிவருகிறோம். இந்நிலையில் எமக்கு வகுப்புவாதி என்று பட்டம் சூட்டப்படுகிறது.

இக்கூட்டத்தில் பேசிய சகல பெளத்தபிக்களும் சிங்கள மக்கள் சகலரும் பிரதேச அரசியல் வேறுபாடுகளை மறந்து தமிழ் ஈழக்கோரிக்கைக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் தமிழாய்வுச் சுற்றுலா

[பண்டத்தரிப்பு]

தென்னிலங்கையைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழ் மொழியின் தொன்மை பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை வாசித்துப் பாராட்டுப் பெற்றவருமான திரு. டி. டி. நாணயக்காரா தமிழ்மொழி ஆராய்ச்சியின் பொருட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

மதுரையில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது அனைத்துலக மகாநாட்டில் 'பிறமொழியாளரை வருத்தும் முத்தமிழ்' என்னும் விடயம்பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

சுமார் இருவார காலம் யாழ்மாவட்டத்தில் தங்கியிருந்து பல்வேறு கிராமங்களுக்கும் நேரில் சென்று தமிழ்-சிங்கள சொற்களின் ஒற்றுமையை எடுத்துக், காட்டும் சொல் ஆராய்ச்சியில் திரு. நாணயக்காரா ஈடுபடுவார்.

### பாப்பரசரின் ஆசிகொண்டுவந்த

# லூர்துசாமி ஆண்டகைக்கு யாழ்.நகரில் பெருவரவேற்பு

[யாழ்ப்பாணம்]

பரிசுத்த பாப்பரசரின் நேரடிப் பிரதிநிதியும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான பேராசிரியர் மேதகு லூர்துசாமி ஆண்டகை உரோமையிலிருந்து யாழ். புனித மரியாள் ஆலயத்துக்குப் பாப்பரசரின் ஆசிச்செய்தியுடன் 'வந்தார்' அன்னாருக்கு தமிழ் மகன் என்ற வாஞ்சையுடன் கூடிய மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நாதஸ்வர இசையுடன் தமிழ் முறைப்படி ஆரத்தி எடுத்துப் பொட்டிட்டு வரவேற்கப்பட்ட ஆண்டகைக்கு டாக்டர் பிலிப் யாழ் கத்தோலிக்க பங்குச் சங்கத்தின் சார்பாக மலர்மாலை அணிவித்தார். இதையடுத்து மூன்று ஆயர்களின் கூட்டுத் திருப்பலிப்பூசை ஆரம்பமானது. மேதகு. லூர்துசாமி தலைமையில் நடந்த இக் கூட்டுப்பலி பூசையில் பெருந்தொகையரான குரவர்களும் கலந்து கொண்டனர்.

மேதகு. லூர்துசாமி ஆண்டகை இப்பலிப்பூசையில் பேசுகையில் கூறியதாவது:

"இரத்தத்தால் — ஆன்மாவால் — மொழியால் ஒன்று பட்ட நிலையில் இங்கு இப் பலிபூசையை ஒப்புக்கொடுக்க எனக்குச் சந்தர்ப்பம் கிட்டியதில் பெருமகிழ்வடைகிறேன். யாழ்ப்பாண மக்கள் பண்பாளர்கள், அன்பானவர்கள் என்பதை நான் தமிழகத்திலும் உரோமையிலும் பேராயராக இருக்கையில் அறிந்திருந்தேன். அது எத்துணை தூரம் உண்மையென்பதை இன்று இங்கு கண்டுகொண்டேன்.

"கிறிஸ்து பெருமான் அரசன் என்றால் நாம் குடிகள். அவர் தந்தையென்றால் நாம் மக்கள். அவர் மணவாளன் என்றால் நாம் மணமகள். அவர் தோட்டக்காரன் என்றால் நாம் செடிகள். இந்த உண்மையை உணர்ந்து நாம் ஒரே குடும்பமென்ற முறையில் வாழவேண்டும்.

பாப்பரசரின் விசேஷ ஆசியையும் நல்லெண்ணத்தையும் உங்களுக்காக எடுத்துவந்துள்ளேன்" என்றார்.

யாழ் கிறிஸ்தவ மக்கள் சார்பாக வழங்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தில் ஒரு தமிழ் மகன் உரோமையில் இத்தகைய பெரும் பதவியை வகிப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. வைபவ இறுதியில் ஆயர் பேரருள் பெருந்தகை லூர்துசாமி பாப்பரசரின் ஆசீர்வாதமான அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை வழங்கினார். [கி-அ]

### யாழ். ஆயுள்வேதக் கல்லூரி

# இறுதி ஆண்டுப் பரீட்சையை ஆஸ்பத்திரிச் சபை நடத்தும்

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சையை இவ்வருடம் முதல் ஆயுர்வேத வைத்தியக் கல்வி ஆஸ்பத்திரிச் சபை நடத்தவுள்ளது,

யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேதவைத்தியக் கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சை, மூன்று ஆண்டுகளின் பின்பு இப் புதிய சபையினால் நடத்தப்படுகிறது. இதற்கான ஒழுங்குகளை கல்லூரி அதிபரும், இயக்குனர் சபை உறுப்பினருமான டாக்டர் ஆர் ஈ. டபிள்யூ. ஜெயசோதி னம் செய்துவருகிறார்.

1976ம் ஆண்டில் மேற்படி கல்லூரியில் இறுதி ஆண்டுப் பரீட்சைகளை, அரசினர் ஆயுர்வேதக் கல்லூரி ஆஸ்பத்திரிச் சபையே நடத்தி வந்தது. ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி பல்கலைக் கழகமாகத் தரமுயர்வதைத் தொடர்ந்து இச்சபை கலைக்கப்பட்டு, ஆயுர்வேத வைத்தியக் கல்வி ஆஸ்பத்திரிச்சபை என்ற இப் புதிய சபை இப்பரீட்சையை நடத்தவிருக்கிறது. இவ்வாண்டு நடைபெறவிருக்கும் மேற்படி பரீட்சையில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் பரீட்சை எழுதவிருப்பதாகத் தெரியவருகிறது. [அ]

## எதிர்க்கட்சித்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராடி வருகின்றோம். எமது போராட்டம் வெற்றிபெறும் காலம் வெகு தூரத்தில் இல்லை

"பொழுது புலர்வதற்கு முன் வானம் இருள்கட்டியிருப்பது போல், என்றுமில்லாதவாறு தற்போது எம் இனம் அந்தகாரத்துள் தள்ளப்பட்டுள்ளது. இது எமது இனத்தின் விடிவிற்கு அறிகுறியாகவுள்ளது.

'தமிழர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்தால் என்ன வேறு எந்த உயர்பதவியை வகித்தால் என்ன, அவன் இந்த நாட்டின் இரண்டாந்தர பிரஜை என்று எண்ணம் இந்த அரசாங்கத்தின் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் நிலவுகிறது தமிழ் மக்கள் இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற எண்ணம் இளம் சந்ததியின் மனதில் தோன்றவிடாதுபாதுகாக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமை.

"தமிழ் மக்களின் மூலதனம் கல்வி. இதனை ஆசிரியர்கள மனதில் கொண்டு, சரியான முறையில் மாணவர்களுக்குக் கல்வியை போதிக்க வேண்டும், எமக்கு கஷ்டகாலம் வரும்போது எம்மைப் பாதுகாக்கக்கூடியது கல்விதான்' என்றார். [கொ[

## தோட்டி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மலசலகூடங்களிலுள்ள மலங்களை வண்டில் மூலம் கச்சாய் கடற்கரைக்கு கொண்டுசென்று போட்டனர். மற்றைய பிரிவினர் சந்தை மைதானம், வீதி போன்றவற்றைக் கூட்டி குப்பைகளை வண்டில்களில் கொண்டுசென்று உரிய இடங்களில் போட்டனர்.

வள்ளுவர் சிலை முன்றலில் தோட்டி வேலை செய்ய முன்னர் தொண்டர்கள் மத்தியில் திரு வி. என். நவரத்தினம் உரையாற்றுகையில், "தொழிலின் சமத்துவத்தை சமூதாயம் உணரவேண்டும். வள்ளுவரே சாதி இல்லை என்று கூறியிருக்கிறார். எனவே எமது இந்த முயற்சி வள்ளுவரின் சிலை முன்றலில் இருந்து ஆரம்பமாவது பொருத்தமாகும்" என்றார்.

தோட்டித் தொழில் முடிந்ததும் சகல தொண்டர்களும் மதுலங்கேணி சேரிக்குச் சென்று சமபந்திப் போசனத்தில் ஈடுபட்டனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... [illegible] ... இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QP/3945/78 The Eelanadu P B No: 49, Telegrams: Eelanadu Phone: 289.